முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1470

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.10.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. பிரம்ம சூட்சும குருராஜனே
   பிரணவ சித்திமிகு தவராஜனே
   வரம்பல பெற்று என் அவதாரமாக
   வையகத்தில் வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21 ம் நாள், 08.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வரமென அரங்கமகான் உன்வழி
   வையகத்தை யானே வழி நடத்துகின்றேன்
3. நடத்துகின்ற உன் பிரணவக்குடிலாம்
   ஞாலமதில் உலகோர்க்கு ஞானசபையாகும்
   தடையின்றி இவை தடத்தில்
   தரணியோர் வந்து அரங்கன் உன் திருவடி பற்றி
4. பற்றியே ஞானம் பயின்றால்
   பழுதின்றி பிரம்ம ஞானம் சித்தியாகும்
   உற்றதொரு பிரணவ சித்திமிகு
   ஓங்கார ஞானமும் சித்தியாகி
5. ஆற்றல்பட வருவோர் எல்லாம்
   அரங்கன் உன்னால் ஞானிகளாகி
   அகிலத்தையே மாற்றும் வல்லமை உள்ளவர்களாக
   ஆகியே உலகமாற்றம் புரிவர் அரங்கன் உன் தர்மத்தால் இது நடக்கும்
6. மாற்றம் தரும் அரங்கன் உன் சன்மார்க்கத்தால்
   மக்களெல்லாம் ஞானிகளாக உருவெடுத்து
   உருவெடுத்து இந்த உலகை காக்கும்
   உயர் சக்திகளாக மாறுவரப்பா

7. குருவாக உன்னை உலகோர் ஏற்று
குறையிலா திருவடி பணிந்து வந்தால்
திருவருளை பெற்று உலகோரெல்லாம்
தெய்வநிலை கண்டு சிறப்பர்

8. ஆகவே அரங்கன் ஞானம் அகிலத்தை மாற்றும் உயர் ஞானம்
வகையான அரங்கன் தர்மம் வையகத்தையே காக்கும் மாதர்மம்
தர்மவழி மக்களெல்லாம் வர
தரணியில் அற்புதம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—